தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 152/ந/2023
நாள் 13.07.2023

திரு.S.H. முஹம்மது அன்சாரி,
காயல்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சின்ன நெசவு தெரு, கதவு எண்.41/A2 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.H. முஹம்மது அன்சாரி என்பவரின் 02.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.05.2023 அன்று பெறப்பட்டு, 152/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சின்ன நெசவு தெரு, கதவு எண்.41/A2 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.H. முஹம்மது அன்சாரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“எனது தாயார் வழி மூலம் வந்த குடும்ப இடத்தை தனித்தனியாக ஆண் மக்கள் நான் உள்பட நான்கு சகோதரர்களுக்கும் பிரிக்கும்போது முதல் சகோதரர் அசரபு அலிக்கு வீடும் இரண்டு, மூன்று மற்றும் நான்காவது நபரான நான் உட்பட அனைவருக்கும் அந்த வீட்டின் பின்புறம் உள்ள காலிமனையும் கிடைத்தது.

முதல் சகோதரர் அசரபுஅலி என்பவர் வீட்டில் உள்ள குடிநீர் இணைப்பு எண். 139/1659 தோட்டப்பகுதியான எனக்கு கிடைத்த இடத்தில் இருந்தது. நான் தனியாக வீடு கட்டிய பின் அந்த 139/1659 எண் கொண்ட குடிநீர் இணைப்பு எனது தாயார் பீஷபாத்திமா பெயரிலும் மற்றும் அசரபுஅலி, வீட்டு எண்.7 என்ற முகவரியிலும் இருந்தது இதை நான் பயன்படுத்தி வந்தேன்.

இரண்டாவது சகோதரர் கண்சூர் ரஹ்மான் அவருக்கு கிடைத்த காலிமனையை செய்யது அஹமது கதீஜத்துல் குபுராவிற்கு விற்பனை செய்துள்ளார். இந்த இடத்தை விற்பனை செய்தது சகோதரருக்குள் போடப்பட்ட பத்திர ஒப்பந்தத்தை மீறியது என தனியாக திருச்செந்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளேன். வழக்கு எண். 87/2021.

செய்யது அஹமது கதிஜத்துல் குபுரா அந்த காலி இடத்தில் வீடு கட்டி வீட்டு பிளான்/தீர்வை இல்லாமலேயே குடிநீர் இணைப்பு எடுத்து பயன்படுத்தி வந்தார். இது குறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நான்கு மனுக்கள் கொடுத்தேன்.

| மனு எண் | நாள் |
|---|---|
| 4197169 | 08.08.2022 |
| 4292018 | 22.08.2022 |
| 4466182 | 10.10.2022 |
| 4670494 | 28.11.2022 |

இதற்கிடையில் குடிநீர் இணைப்பு எண்.139/1659–ல் எனது பெயர் / வீட்டு எண் ஆகியவற்றை மாற்ற வேண்டி நகராட்சி பணியாளர் திரு.நவநீத கிருஷ்ணன் என்பவரை அணுகியபோது அவரின் அறிவுறுத்தலின் பேரில் 6, டிசம்பர் 2022 அன்று டெபாசிட் ரூ.5,000/– (ஐந்து ஆயிரம்), பெயர் மாற்றக் கட்டணம் ரூ.50/– (ஐம்பது), கொடி வகை கட்டணம் ரூ.50/– (ஐம்பது) ஆகமொத்தம் ரூ.5,100/– கட்டி + நோட்டரி பப்ளிக் ரூ.20/– பத்திரம் கையெழுத்து இட்ட மனுவை திரு. நவநீத கிருஷ்ணன் அவர்களிடம் கொடுத்தேன்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நான் கொடுத்த மனுக்களால் என் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட நகராட்சி நிர்வாகம், 24.12.2022 அன்று எனது குடிநீர் இணைப்பை அதே திரு. நவநீத கிருஷ்ணன் அவர்கள் மூலம் துண்டித்தார்கள். இந்த துண்டிப்பிற்கு எனக்கு எவ்வித முன்அறிவிப்பும் தரவில்லை. இக்குடிநீர் துண்டிப்பு குறித்து நகராட்சியை அணுகியபோது பெயர்

மாற்றம் செய்து தர முடியாது என்றும் தாங்கள் புதிய குடிநீர் இணைப்பு பெற வேண்டும் என்றார்கள்.

31.12.2022 அன்று நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் குடிநீர் இன்றி சிரமப்படுவதை நான் கூறியபோது உனடியாக குடிநீர் வழங்க பிட்டர் நிசார் அவர்களை அறிவுறுத்தினார்கள்.

03.01.2023 அன்று பிட்டர் அவர்கள் ஏற்பாட்டின் பேரில் எனக்கு குடிநீர் வழங்க பணியாளர் தோண்டிக் கொண்டு இருக்கும் போது, நகராட்சி தலைவர் எனக்கு குடிநீர் கிடைப்பதை தடுத்து நிறுத்திவிட்டதுடன் அவரை அலுவலகத்தில் சந்திக்குமாறு தெரிவித்தார்கள்.

03.01.2023 அன்று நகராட்சி தலைவர் அவர்கள் அலுவலகத்தில் எங்களிடம்

(1) திரு.செய்யது அஹமது கதீஜத்துல் குபுரா முறைகேடாக பயன்படுத்தி வரும் குடிநீரை எதிர்த்து மனு செய்யக்கூடாது.

(2) தங்களின் பழைய குடிநீரை என்னால் உங்கள் பெயருக்கு மாற்றி தர இயலும், எனக்கு குடிநீரை கொடுக்கவும் தெரியும், அதை கட் பண்ணவும் தெரியும் இன்னும் பல கூறி இதற்கு ஒத்துழைத்தால் உங்களுக்கு தொடர்ந்து குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்றார். இதற்கு நாங்கள் உடன்படவில்லை.

24.12.2022 அன்று எனது குடிநீர் இணைப்பை துண்டித்தபோது அந்த குடிநீர் இணைப்புக்கு மார்ச் 2023 வரை வரி செலுத்தி உள்ளேன். எனவே 26.12.2022 அன்று புதிய குடிநீர் இணைப்பு வேண்டி, விண்ணப்பத்துடன் உரிய கட்டணம் செலுத்தி 03.02.2023 அன்று புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது. (இணைப்பு எண்.900586)

இந்நிலையில் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பிற்கும் (எண்.39/1659) தற்போது புதிதாக வழங்கப்பட்ட இணைப்பிற்கும் (எண். 900586) ஜுன் 2023 வரை குடிநீர் வரி செலுத்தியுள்ளதால், மீண்டும் தனது தாயார் பெயரில் இருந்த இணைப்பை தனது பெயர் மாற்றி மீண்டும் வழங்குமாறும், புதியகுடிநீர் இணைப்பிற்கு (எண்.900586) செலுத்திய கட்டணத் தொகையை திரும்ப வழங்குமாறும் கோரியுள்ளார்".

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் காயல்பட்டணம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

காயல்பட்டணம் நகராட்சி ஆணையர் தனது 23.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மனுதாரராகிய திரு.முஹம்மது அன்சாரி, தன் வீட்டின் அருகில் வசித்து வருகின்ற அவரது சகோதரி கதீஜத்துல் குப்ரா என்பவர் நகராட்சி அனுமதியின்றி குடிநீர் இணைப்பு ஒன்றினை பயன்படுத்தி வருவதாக 11.10.2022 அன்று புகார் தெரிவித்துள்ளார். இந்நிலையில், புகார் தொடர்பாக, காயல்பட்டணம் நகராட்சிப் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வின்போது சம்பந்தப்பட்டவர்களிடம் முறையான ரசீதுகளை சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார். அந்த சமயத்தில் வீடுகளில் உள்ள நபர்கள் பின்னர் வந்து சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்கள். அதன்படி அலுவலகத்தில் இது தொடர்பாக எவ்வித ஆவணங்களும் வழங்கப்படாத நிலையில், காயல்பட்டணம் நகராட்சி மூலம் கடந்த 01.11.2022 அன்று ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு தெரிவித்து அறிவிப்பு வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மனுதாரர் 06.12.2022–ல் குடிநீர் இணைப்பை தனது தாயார் பெயரில் இருந்து தனது பெயருக்கு மாற்றம் செய்ய விண்ணப்பம் செய்துள்ளார். பின்னர் குழாய் பொருத்துநர் அவர்கள் நேரில் சென்று, மனுதாரர் மற்றும் அவரது சகோதரி ஆகியோரின் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண ரசீதுகளை பெற்று சரிபார்த்ததில், மனுதாரரின் கதவு எண்ணானது, குடிநீர் இணைப்பு ரசீதில் உள்ள கதவு எண்ணிற்கும் சொத்து வரி ரசீதில் உள்ள கதவு எண்ணிற்கும் வேறுபாடாக இருந்ததும் தெரிய வந்தது. மேலும் தனது தாயார் பெயரில் உள்ள குடிநீர் இணைப்பினை, விதிமுறைகளுக்கு முரணாக பயன்படுத்தி வந்துள்ளதால், அதனையும், மேற்படி அவரது சகோதரி எவ்வித அனுமதியும் பெறாமல் விதிமுறைகளுக்கு முரணாக பயன்படுத்தி வந்த குடிநீர் இணைப்பு ஆகிய இரண்டு குடிநீர் இணைப்புகளையும் துண்டிப்பு செய்திட நகராட்சிப் பொறியாளர் 23.12.2022 அன்று பரிந்துரை செய்துள்ளார். அதன்படி, 24.12.2022 அன்று மேற்படி இரண்டு குடிநீர் இணைப்புகளும் துண்டிப்பு செய்யப்பட்டது. பின்னர் மனுதாரரை புதிதாக முறையான குடிநீர் இணைப்பு பெற்றுக்கொள்ள அறிவுறுத்தியதின் பேரில், தனியருடைய கதவு எண்.41/ஏ2–க்கான சொத்துவரி ரசீதின் அடிப்படையில் முறையான கட்டணங்கள் பெறப்பட்டு புதியதாக குடிநீர் இணைப்பு (குடிநீர் இணைப்பு எண்.139/015/900586) 03.02.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 2022 – 23 ஆம் நிதியாண்டிற்கான கணக்கு முடிப்பது மற்றும் சொத்துவரி மறுசீராய்வு தொடர்பான பணிகளும் UTIS மென்பொருளில் நடைபெற்று வந்த காரணங்களினாலும் மேலும் காயல்பட்டணம் நகராட்சியில் பணியாளர் பற்றாக்குறையாக இருந்த காரணத்தினாலும் மேற்படி மனுதாரரின் தாயார் பெயரில் உள்ள குடிநீர் இணைப்பானது கேட்பு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்யப்படாமல் இருந்து வந்துள்ளது. மேலும் மனுதாரரிடமிருந்து 06.12.2022 அன்று பெறப்பட்ட விண்ணப்பித்தின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, தவறுதலாக குடிநீர் இணைப்பின் பெயர் மாற்றமும் செய்யப்பட்டு தற்போது மேற்படி தவறு சரிசெய்யப்பட்டது. மேலும், மேற்படி துண்டிக்கப்பட்ட (குடிநீர் இணைப்பு எண்.139/1659) குடிநீர் இணைப்புக்கான கேட்பானது 23.06.2023 அன்று கணிணி பதிவில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்ற விபரத்தையும் இதன்மூலம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரும் மற்றும் காயல்பட்டணம் நகராட்சி ஆணையரும் 27.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.S.H. முஹம்மது அன்சாரி என்பவர் 27.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், 41/A2, சின்னநெசவு தெரு என்கிற முகவரியில் அமைந்துள்ள எனது வீட்டிற்கு அருகில் கதீஜத்துல் குபுரா என்பவர், நகராட்சி அனுமதியின்றி குடிநீர் இணைப்பு பெற்றுள்ளது குறித்து நகராட்சிக்கு புகார் மனு அனுப்பியிருந்தேன். மேற்கண்ட மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில், மேற்கண்ட கதீஜத்துல் என்பவர் மீது என்னால் அளிக்கப்பட்ட புகார் மனுவைபொட்டி, அனுமதியில்லா குடிநீர் இணைப்பு என காரணம்காட்டி எனது தாயார் பெயரில் இருந்த எனது குடிநீர் இணைப்பை நகராட்சியினர் துண்டித்துவிட்டனர். துண்டிக்கப்பட்ட மேற்கண்ட இணைப்பை மீண்டும் பெறவும் எனது தாயார் பெயரில் இருந்த குடிநீர் கேட்பை எனது பெயருக்கு மாற்றம் செய்து தரும்படி 6.12.2022ல் நகராட்சிக்கு மனு அளித்து குடிநீர் கட்டணமாக ரூபாய் 5 ஆயிரம் நகராட்சிக்கு செலுத்தியிருந்தேன். எனது பெயருக்கு மாற்றித்தர இயலாது என தெரிவித்திருந்த நகராட்சியினர் தற்போது எனது தாயார் பெயரில் உள்ளதை எனது பெயருக்கு குடிநீர் இணைப்பு கேட்பினை மாற்றிவிட்டனர்.

எனவே, அத்தியாவசிய தேவையான குடிநீர் இணைப்பினை துண்டித்த அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் நான் புதிய இணைப்பு பெறும்பொருட்டு என்னால் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட டெபாசிட் தொகை மற்றும் குடிநீர் வரி ஆகியவற்றை எனக்கு நகராட்சினர் திரும்ப அளித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான காயல்பட்டணம் நகராட்சி ஆணையர் மற்றும் குழாய் பொருத்துநர் ஆகிய இருவரும் 27.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்.

''மனுதாரரின் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது குறித்து புகார் மனு பெறப்பட்ட பின்னர் நேரில் கள ஆய்வு செய்து, மனுதாரர் புகார் அளித்திருந்த, மனுதாரரின் சகோதரி திருமதி. கதீஜத்துல் குபுரா மற்றும் மனுதாரர் ஆகியோரின் சொத்து வரி மாற்றம் மற்றும் குடிநீர் கட்டண ரசீதுகள் சரிபார்க்கப்பட்டது. மனுதாரரின் குடிநீர் இணைப்பு ரசீதில் உள்ள கதவு எண்ணிற்கும் சொத்து வரி ரசீதில் உள்ள கதவு எண்ணிற்கும் வேறுபாடு இருந்ததால், விதிமுறைகளுக்கு மாறாக பயன்படுத்திவந்த மனுதாரரின் குடிநீர் இணைப்பு 24.12.2022 அன்று துண்டிக்கப்பட்டது. பின்னர் புதிதாக முறையான குடிநீர் இணைப்பு பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது எனவும் அதன் பின்னர் 3.2.2023ல் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரரின் தாயார் பெயரில் இருந்த குடிநீர் இணைப்பு தவறுதலாக குடிநீர் இணைப்பின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது மேற்கண்ட தவறு சரி செய்யப்பட்டுவிட்டது எனவும் துண்டிக்கப்பட்ட இணைப்பிற்காக மனுதாரர் செலுத்தியிருந்த ரூபாய் 5 ஆயிரத்தை நகராட்சி கணக்கை சரிபார்த்து அதனை விரைவில் திரும்ப வழங்கப்படும் எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் குழாய் பொருத்துநர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணத்தைச் சேர்ந்த மனுதாரர் திரு.S.H.முஹம்மது அன்சாரி என்பவர் தனது 02.05.2023 நாளிட்ட மனுவில் காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட, தனது தாயாரின் குடியிருப்பு மற்றும் மனை ஆகியவற்றினை வாரிசுதாரர்களான மனுதாரர் உட்பட நான்கு சகோதரர்களுக்கு பிரித்த வகையில், மனுதாரருக்கு காலிமனை கிடைக்கப்பெற்றதில் அம்மனையில் அவரது தாயாரின் பெயரில் குடிநீர் இணைப்பு இருந்துள்ளதால், தனது தாயாரின் பெயரிலுள்ள குடிநீர் இணைப்பினை தனது பெயரில் மாற்றம் செய்திட கோரியதில், மனுதாரர் ரூ 5,100/– செலுத்தி நகராட்சியால் மனுதாரரின் பெயரில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது. (குடிநீர் இணைப்பு எண்.139/1659).

இதற்கிடையில் மனுதாரரின் சகோதரர் காலிமனை இடத்தில் நகராட்சியின் அனுமதியின்றி கட்டடம் கட்டியது தொடர்பாக மனுதாரரால் மாவட்ட ஆட்சியருக்கு புகார் அளித்ததன் காரணமாக பெயர் மாற்றம் செய்த குடிநீர் இணைப்பு 24.12.2022 அன்று நகராட்சியால் துண்டிக்கப்பட்டு, புதிய குடிநீர் இணைப்பினை வழங்க புதிய மனு சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர். அதன்படி மனுதாரர் ரூ 7,865/– கட்டணம் செலுத்தி 03.02.2023 அன்று புதிய குடிநீர் இணைப்பினை பெற்றுள்ளார். (குடிநீர் இணைப்பு எண்.900586)

மனுதாரர் தாயாரின் பெயரிலிருந்து மனுதாரர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு பின்னர் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு எண்.139/1659 மற்றும் புதியதாக பெறப்பட்ட குடிநீர் இணைப்பு எண்.900586 ஆகிய இரண்டு இணைப்புகளுக்கும் குடிநீர் வரியானது மனுதாரரால் ஜுன் 2023 வரை செலுத்தப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

குடியிருப்புகளுக்கான குடிநீர் இணைப்பில் பெயர் மாற்றம் செய்யும் நேர்வுகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் கடைபிடிக்காமலும் உரிய ஆவணங்களை பரிசீலனை

செய்யாமலும் குடிநீர் இணைப்பு ரசீதில் உள்ள கதவு எண்ணிற்கும், சொத்து வரி ரசீதில் உள்ள கதவு எண்ணிற்கும் உள்ள வேறுபாட்டினைகூட சரிவர ஆய்வு செய்யாமலும் பொறுப்பற்ற முறையிலும் மனுதாரரின் தாயார் பெயரிலிருந்து குடிநீர் இணைப்பை (இணைப்பு எண்.139/1659) மனுதாரர் திரு. S.H.முஹம்மது அன்சாரி என்கிற பெயரில் மாற்றம் செய்த சம்பந்தப்பட்ட காயல்பட்டணம் நகராட்சி அலுவலர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்புக்காக மனுதாரர் செலுத்திய கட்டணத்தை மனுதாரருக்கு உடனடியாக திரும்ப செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.H.முஹம்மது அன்சாரி,
41/A2, சின்ன நெசவு தெரு,
காயல்பட்டணம் – 628 204, தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர், காயல்பட்டணம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/7/23
உதவிப் பதிவாளர்

13/07/23